உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 15.05.2026 • மலர் 04 • இதழ்: 135 • Edition : Nagercoil • 15.05.2026 • Vol : 04 • Issue : 135 • Page : 4 • Rs. 5/-

### மாதம் ரூ.2,500னு சொல்லிட்டு, ஆயிரம் ரூபாய் கூட தரவில்லை

# இதுதான் உங்க மாற்றமா?

## முன்னாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை, மே15

பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகையாக வழங்கப்பட்டுவரும்கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது, எனவே மே மாதத்திற்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்று முதல்அமைச்சர் ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மாதம் ரூ.2,500 என்று சொல்லிவிட்டு, ஆயிரம்ரூபாயை கூட தராமல் இழுத்தடிக்கிறதுதான் உங்கள் மாற்றமா? என்று திமுக தலைவரும், முன்னாள் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

முதல்அமைச்சர் அவர்களே, மே மாசத்துக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை 15ம் தேதி வரவு வைக்கணும். ஏற்கனவே உள்ள திட்டத்தைத் தொடர இப்ப எதுக்கு அவகாசம்? என்ன மறுசீரமைப்பு பண்ண போறீங்க? திராவிட மாடல் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் தொடரும்னு நேத்துதான சட்டப்பேரவையிலயே சொன்னீங்க? மாசம் 2,500 ரூபாய்னு சொல்லிட்டு, ஆயிரம் ரூபாய் கூட தராம இழுத்தடிக்கிறதுதான் உங்க மாற்றமா?



இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## விசிக அலுவலகத்திற்கு சோபா வந்தது ஏன்? திருமாவளவன் விளக்கம்

சென்னை, மே. 15

சென்னையில் விசிக தலைவர் திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மே 17 முல்லை வாய்க்கால் நினைவேந்தல் இந்த துயரத்தை 3 நாட்கள் அனுசரித்து வருகிறார்கள். விசிக மே 18 சர்வதேச இனப்படுகொலை என அனுசரித்து அதை கடைப்பிடித்து வருகிறோம். ஜூன் 14 தேதி விசிக சார்பில் விருதுகள் வழங்கும் விழா நடைபெறுகிறது. ஜூலை 23 உலகத் தமிழர்கள் நினைவுகூரப்படும் ஒரு நாள் கருப்பு ஜூலை என போராளிகளுக்கு கடைபிடிக்கப்படுகிறது.

மகளிர் உரிமை திட்டம் தொடரும் என சொன்னது மகிழ்ச்சியானது. அதை வரவு வைக்க வேண்டிய நாள் சற்று தள்ளி போவது ஒரு புறம் இருந்தாலும், விரைவில் அனைவருக்கும் வரவு வைக்கப்படும் என சொல்வது வரவேற்கத்தக்கது.

இடது சாரிகள் எடுக்கும் முடிவை வைத்து எங்கள் கட்சியில் கூட்டம் நடத்தி அதன் பின்னர் முடிவு எடுப்போம் என



சொன்னோம். அதன்படிதான் நாங்கள் கலந்தாய்வு செய்து முடிவெடுத்தோம். எங்கள் கட்சியின் கூட்டம் முடிந்து கட்சியினரிடமே நாளை மறுநாள் தான் அறிவிப்போம் என சொன்னேன். ஆனால் நான் ஊடகங்களுக்கு யாருக்கும் தெரிவிக்கவில்லை. திட்டமிட்டபடி நடந்த கட்சியின் ஆன்லைன் கூட்டத்தில் எடுத்த முடிவில் பல கருத்துகள் வந்தது.

அதன் பின்னர் என்னுடைய முடிவுக்கு கட்டுப்படுவோம் என கட்சி நிர்வாகிகள் சொன்னார்கள். அதன் பின்னர் தான் நாங்கள் அறிவித்தோம். ஆனால் எங்களை பிடிக்காத சிலர் நாங்கள் தலைமறைவாகி விட்டோம் எங்கோ சென்று விட்டோம் என அவதூறுகளை பேசினார்கள். முதல்அமைச்சர் பதவிக்காக காத்திருக்கவில்லை. என்னை முதல் அமைச்சராக்க முயன்றது குறித்து எனக்கு தெரியாது. நண்பர்கள் மூலமாக தான் என்னை முதல் அமைச்சராக்கும் முயற்சி குறித்து தெரிய வந்தது. முதல்அமைச்சர் பதவிக்காக தான் தவெகவிற்கு ஆதரவளிப்பதற்கு தாமதம் செய்ததாக அவதூறு பரப்புகிறார்கள்.

ஏற்கனவே ஆர்டர் செய்த சோபா தான் அலுவலகத்திற்கு வந்தது. விசிக அலுவலகத்திற்கு சோபா வந்ததை குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறவில்லை. அதிமுகவில் உருவாகியிருக்க ஒரு அணியின் தலைவரை, சட்டமன்ற உறுப்பினர்களை சந்திக்க முதல்அமைச்சர் சென்றதை உதயநிதி சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று கருதுகிறேன். இது தற்செயலாக நடந்தது. விஜய்யின் வருகைக்காக ஆர்டர் செய்யப்படவில்லை. தவறான தகவலை பரப்ப வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

## மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை நிறுத்தம்? தமிழக அரசு விளக்கம்



சென்னை, மே. 15

கடந்த திமுக அரசின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் கீழ் அரசு மாநகர பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணித்து வந்தனர். இதனிடையே தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தவெக அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை நிறுத்தப்பட்டதாக சமூக வலைதளங்களில் செய்தி பரவி வருகிறது.

இந்த நிலையில் இதுதொடர்பாக தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா சேவை நிறுத்தப்பட்டதாக சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பப்பட்டு வருகிறது. இது முற்றிலும் பொய்யான தகவல். தமிழ்நாடு அரசு சார்பாக, இதுகுறித்து எவ்வித அதிகாரபூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இன்று (14.05.2026) அரசுப் பேருந்துகளில் மகளிருக்கு வழங்கப்பட்ட கட்டணமில்லா பயணச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்வு

### முதல்அமைச்சர் விஜய் அறிவிப்பு

சென்னை, மே. 15

தமிழ்நாடு முதல் அமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையிலான அரசு, மக்கள் நலனை முன்னிறுத்தி மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதிமொழி அளித்துள்ளது. இந்தத் திட்டங்களை வடிவமைப்பதிலும், அவற்றை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதிலும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றனர்.

அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு 1.1.2026 முதல் 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும் அதனால்



பயன்பெறும் வகையில், தமிழ்நாடு முதல்அமைச்சர் இதனைக் கனிவுடன் பரிசீலித்து, 1.1.2026 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்.

இதனால் 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 2 சதவீதம் உயர்ந்து 1.1.2026 முதல் 60 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

## எடப்பாடி பழனிசாமி உள்பட 22 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்: சி விஜயபாஸ்கர்

சென்னை, மே. 15

சட்டமன்ற தேர்தலில் படுதோல்வி அடைந்ததன் எதிரொலியாக அதிமுகவில் உள்கட்சி மோதல் மீண்டும் ஏற்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஒரு தரப்பும்,சிவி சண்முகம் எஸ்.பி வேலுமணி தலைமையில் ஒரு தரப்பினரும் இயங்கி வருகிறார்கள். சட்டமன்றத்தில் தவெக அரசுக்கு ஆதரவாக வேலுமணி தரப்பை சேர்ந்த 25 எம்.எல்.ஏக்கள் வாக்களித்தனர். அதேபோல் எடப்பாடி பழனிசாமி தரப்பை சேர்ந்த 22 பேர் தவெக அரசுக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி உள்பட 22 பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி சபாநாயகரை சந்தித்து எஸ்பி மேலுமணி தரப்பினர் மனு அளித்தனர். பின்னர் சி விஜயபாஸ்கர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

எஸ்.பி. வேலுமணி தலைமையில் பெரும்பான்மையான அதிமுக எம்.



எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் எஸ்.பி. வேலுமணி சட்டமன்றக் குழு தலைவராகவும், என்னை கொறடாவாகவும் எம்.எல்.ஏ.க்கள் ஏற்றுக்கொண்டு நியமனம் செய்தனர். நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு சட்டமன்றத்தில் நடைபெற்ற நிலையில், அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று உரிய விதிகள்படி நாங்கள் அவர்களுக்கு கூறியிருந்தோம். அதில், 25 எம்.எல்.ஏ.க்கள் கொறடா உத்தரவை ஏற்று நடந்தார்கள். 22 எம்.எல்.ஏ.க்கள் அதிமுக கொறடா உத்தரவை நிராகரித்துள்ளனர்.

எனவே, சட்டப்பேரவை சபாநாயகரை எங்கள் அதிமுக குழு சந்தித்து, 22 பேர் மீதும் கட்சி தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனு அளித்துள்ளோம். பெரும்பான்மையான எம்.எல்.ஏ.க்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதுதான் சட்ட விதி. சட்டமன்றக் கட்சி என்பதுதான் செல்லும். அதைத்தான் நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. பெரும்பான்மை தான் செல்லும். சபாநாயகர் உரிய விதிகளின்படி நல்ல முடிவு எடுப்பார்" இவ்வாறு அவர் கூறினார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## எரிபொருள் சிக்கனம்; சட்டப்பேரவைக்கு பைக்கில் வந்த முதல் மந்திரி



சென்னை, மே. 15

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருளைச் சார்ந்திருப்பதைக்குறைப்பதன் மூலம் பொருளாதார மீட்சிக்கு பங்களிக்குமாறு பிரதமர்மோடி குடிமக்களுக்குவேண்டுகோள் விடுத்து இருந்தார். அவரும் தனது வாகன அணிவகுப்பில் இருந்த வாகனங்களை பாதியாக குறைத்தார்.

இந்த நிலையில், சிக்கன நடவடிக்கையாக சட்டப்பேரவைக்கு மராட்டிய முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் பைக்கில் வருகை தந்தார். இது குறித்து அவர் பட்னாவிஸ் கூறியதாவது: எரிபொருள் சிக்கனம் குறித்த பிரதமர் மோடியின் அழைப்பு அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதற்காக இதை செய்கிறோம். எங்களின் கான்வாய் அணிவகுப்பையும் குறைத்து விட்டோம். அடுத்த 6 மாதங்களுக்கு அரசு எந்த பெரிய நிகழ்ச்சிகளையும் நடத்தாது" என்றார் இதேபோல, டெல்லி அரசும் சிக்கன நடவடிக்கையை அறிவித்துள்ளது. டெல்லி முதல் மந்திரி ரேகா குப்தா, மந்திரிகள் மற்றும் பா. ஜனதாவின் அனைத்து சட்ட சபை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், டெல்லி அரசு அதிகாரிகள் மற்றும் அனைத்துத் துறையினருக்கும், தேவைக்கேற்ப குறைந்தபட்ச வாகனங்களைப் பயன்படுத்தவும், பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.



பவானி பகுதிகளில்

# வளர்ச்சி திட்டப்பணிகள்: ஆட்சியர் கந்தசாமி ஆய்வு

ஈரோடு மே 15

ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சி மற்றும் ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பவானி நகராட்சிக்குட்பட்ட தேவபுரம் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப்பணிகளையும், அதே பகுதிகளில் செயல்பட்டு வரும் நுண் உரமாக்கும் மையத்தில் தினசரி வீடுகளிலிருந்து சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை செயலாக்கம் செய்து நுண் உரமாக மாற்றும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பவானி ஊராட்சி ஒன்றியம், ஆண்டிக்குளம் ஊராட்சி, விநாயகர்நகர் ரூ.13.28 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கான்கிரீட் தளத்தினை பார்வையிட்டு சாலையின் தரம், நீளம், அகலம் மற்றும்தடிமன்குறித்தும், சாலை அமைக்க பயன்படுத்தப்பட்ட கற்களின் அளவு மற்றும் மூலப்பொருட்களின் தரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பவானி, மைலம்பாடியில் உள்ள ஊர்ப்புற நூலகத்தில் அரசு போட்டித்தேர்வுகளுக்கான நூல்கள், பிற நூல்கள், தினசரி வருகை தரும் வாசகர்கள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளின் விபரம், குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பவானி, மைலம்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறை குறித்தும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டார்.

மைலம்பாடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் வெள்ளித்திருப்பூர் சாலை முதல் கல்பாவி சாலை

வரையில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டார் .

தொட்டிபாளையத்தில் உள்ள நாற்றுப்பண்ணையினை பார்வையிட்டு உற்பத்தி செய்யப்படும் நாற்று வகைகள், நாற்றுகளின் வளர்ச்சி, அவற்றின் பராமரிப்பு ஆகிய செயல்பாடுகள் ஆகியவற்றை குறித்து கேட்டறிந்தார்.

ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், மைலம்பாடி ஊராட்சியில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 202627 ன் கீழ் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் கண்ணடிபாளையம் மைலம்பாடி குப்பிச்சிபாளையம் வரை சாலை ஒருவழித்தடத்தை இடை வழித்தடமாக அகலப்பபடுத்தி உறுதிப்படுத்துதல் மற்றும் பெட்டி பாலம் திரும்பக் கட்டுதல், மழை நீர் வடிகால் கட்டுதல் மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் ரமேஸ்கண்ணா, பவானி, உதவிக்கோட்டப்பொறியாளர் சேகர். பவானி உதவிப்பொறியாளர் பழனிவேலு, பவானி நகராட்சி பொறியாளர் தீலிப் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிந்தனர்



கமுதிஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில ஆணையாளராக மேகராஜ் பொறுப்பேற்றார். அவருக்கு அலுவலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வாழ்த்து தெரிவித்து வரவேற்பளித்தனர். பொதுமக்களுக்கு தேவையான அடிப்படைவசதிகள் மற்றும் வளர்ச்சி பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

தருமபுரி அதிமுக கிழக்கு

# மாவட்ட செயலாளராக டாக்டர் அசோகன் நியமனம்



தருமபுரி மே 15

தருமபுரி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளராக டாக்டர். அசோகனை அதிமுக தலைமை கழகம் அறிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து தருமபுரி நகர பேருந்து நிலையத்தில் நகர செயலாளர் பூக்கடை ரவி தலைமையில்

அதிமுகவினர் பட்டாசு வெடித்தும் ,பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். இதைத் தொடர்ந்து அனைவரும் இரு சக்கர வாகனங்களில் நான்கு ரோடு வழியாக கட்சி அலுவலகம் வரை ஊர்வலமாக சென்றனர்.

ஈரோடு மாநகர அதிமுக மாவட்ட செயலாளராக

# பெரியார் நகர் மனோகரன் நியமனம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



ஈரோடு மே 15

த வெ க வுக்கு ஆதரவு அளித்த விவகாரத்தில் 26 அதிமுக மாவட்ட செயலாளர்களை பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிரடியாக நீக்கினார். இவர்களுக்கு பதிலாக புதிய மாவட்ட செயலாளர்களை அவர் நியமனம் செய்து உள்ளார். ஈரோடு மாநகர் மாவட்டத்தில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மற்றும் மொடக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகள் உள்ளன. இதன் மாவட்ட செயலாளராக இது வரை முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம் இருந்து வந்தார் . இப்போது அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார். அவருக்கு பதிலாக இதுவரை ஈரோடு பெரியார் நகர் பகுதி அதிமுக செயலாளரும் ஈரோடு கிழக்கு தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டவருமான பெரியார் நகர் இரா மனோகரனை எடப்பாடி பழனிசாமி நியமனம் செய்து உள்ளார். புதிய மாவட்ட செயலாளர் மனோகரனுக்கு அதிமுக கட்சி நிர்வாகிகள் ஏராளமான பேர் நேரிலும் போனிலும் வாழ்த்து தெரிவித்தனர். மேலும் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

# திருச்சி: நடைபயிற்சி சென்ற பெண்ணிடம் 6 சவரன் பறிப்பு

திருச்சி, மே. 15

திருச்சி திருவானைக்காவில் கீழ்கொண்டயம்பேட்டை பகுதியைச் சேர்ந்த அம்பிகா, வீட்டின் அருகே நடைபயிற்சி மேற்கொண்டிருந்தபோது, அப்பகுதி வழியாக வந்த மர்ம நபர் ஒருவர் அவர் கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் நகையைப் பறித்துக்கொண்டு தப்பி ஓடினார். இதுகுறித்து அம்பிகா ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் ஸ்ரீரங்கம் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து, நகையைத் திருடிச் சென்ற மர்ம நபரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

தருமபுரியில்

# 5 மது கடைகள் மூடல்




தருமபுரி மே 15

தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தையடுத்து தருமபுரி மாவட்டத்தில் 5 மது கடைகள் மூடப்பட்டன. வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றுக்கு 500 மீட்டர் தொலைவுக்குள் அமைந்துள்ள 717 மது கடைகள் மூடப்படும் என தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இதன் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு இந்த இடங்களுக்கு அருகில் செயல்படும் மதுக் கடைகள் மூடப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் மொத்தம் 67 டாஸ்மார்க் மது கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பேருந்து நிலையங்கள், கல்வி நிலையங்கள், வழிபாட்டுத்த லங்கள் ஆகியவற்றின் அருகில் உள்ள மதுக்கடைகள் குறித்து டாஸ்மார்க் நிறுவனம் சார்பில் கணக்கெடு க்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் தரும புரி மாவட்டத்தில் தருமபுரி நகர பேருந்து நிலையம், பழைய புறநகர் பேருந்து நிலையம் அருகில் செய ல்பட்டு வந்த 3 மது கடைகளும், வெங்க டசமுத்திரம் பேருந்து நிறுத்தம் அருகில்செயல்பட்டுவந்தஇரண்டுமதுக்கடைகளும் என ஐந்து மது கடைகள் மூடப்பட்டன. இதேபோல் மாவட்டத்தில் உள்ள பேருந்து நிலையங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள், தனியார் மற்றும் அரசு கல்வி நிலையங்கள் அருகில் உள்ள மது கடைகள் குறித்து ஆய்வு செய்து அவற்றையும் மூட டாஸ்மார்க் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

தருமபுரி

# அதிமுக மாவட்ட செயலாளர் பதவியிலிருந்து கே. பி. அன்பழகன் நீக்கம்.



தருமபுரி மே 15

தருமபுரி அதிமுக மாவட்ட செயலாளர் கே. பி. அன்பழகனை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து நீக்கி உள்ளார். தமிழக சட்டப்பேரவையில் தமிழக வெற்றிக்கழக அரசிற்கு அதிமுக சார்பில் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் கே. பி. அன்பழகன் தமிழக வெற்றி கழகத்திற்கு ஆதரவு தெரிவித்த நிலையில் அவரை மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்து அதிமுக கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நீக்கி உள்ளார்.



திமுககழகத்தலைவர் மு.க ஸ்டாலின் உதயநிதி ஸ்டாலினை திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார்.



கமுதிஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்வட்டாரவளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பொறுப்பேற்றுள்ள பாலதண்டாயுதபாணி அவருக்கு அலுவலர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வாழ்த்து தெரிவித்து வரவேற்கின்றனர் பலர் மற்றும் பலர் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்



தருமபுரியில் 5 மது கடைகள் மூடல்

# த. வெ. க. வினர் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்

தருமபுரி மே 15

தருமபுரி நகரில் பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள 3 மதுக்கடைகள் மற்றும் வெங்கடசமுத்திரத்தில் 2 கடைகள் எனதருமபுரி மாவட்டத்தில் 5 டாஸ்மார்க் மதுபான கடைகள் மூடப்பட்டன. இதற்கு வரவேற்பு தெரிவித்தும், முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தும் தருமபுரி நகரப் பேருந்து நிலையத்தில் நகர செயலாளர்கள் சிட்டி சுரேஷ் ,விஜயகுமார் ஆகியோர் தலைமையில் தமிழக வெற்றிக்கழகநிர்வாகிகள் மற்றும் ஏராளமான பெண்கள் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இணை செயலாளர் வீரமணி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் சத்யா வீரமணி, நகர மகளிர் அணி செயலாளர் செல்வி,

நகர துணைச் செயலாளர் கவியரசி, கட்சியின் ஒன்றிய செயலாளர் செந்தில் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூரில்

# ரோட்டரி சங்க மூத்த உறுப்பினர்களுக்கு சேவை செம்மல் விருது வழங்கி கௌரவிப்பு



திருப்பத்தூர்:மே:15,

திருப்பத்தூர் மாவட்டம் ரோட்டரி சங்க மூத்த உறுப்பினர்களுக்கு சேவை செம்மல் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவானது தலைவர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் இரவிவர்மன் அனைவரையும் வரவேற்று பேசினார். 202829ஆம் ஆண்டின் மாவட்ட ரோட்டரி ஆளுநர் சுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரோட்டரி சங்க மூத்த உறுப்பினர்களுக்கு ஆடிட்டர் ரவிக்குமார், கணேஷ்மல், ஏலகிரிசெல்வம், எழிலரசன்,கிருபாகரன், கிருஷ்ணன், சுப்ரமணியன், லீலாசுப்ரமணியன் உள்ளிட்ட 21பேருக்கு சேவை செம்மல் விருதுகளை வழங்கி பாராட்டிப் பேசினார். ரோட்டரி சங்கத்தின்ஜவ்வாது மாத இதழ் வெளியிடப்பட்டு அதன் ஆசிரியர் அருண்குமாரை கௌரவித்தனர். திருப்பத்தூர் ரோட்டரி சங்கத்தின் சார்பில் மாவட்ட மாநாட்டு நிதியாக ரூபாய் இரண்டு லட்சம் சுந்தரராஜனிடம் வழங்கப்பட்டது. விழாவில் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் மேலும் சங்க பொருளாளர் அருண்குமார் நன்றி கூறினார். விழாவில் அனைவரும் உணவு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கோயம்பேடு பேருந்து நிலைய இடத்தில் வணிக மால் வேண்டாம்

## பசுமைப் பூங்கா அமைக்க வேண்டும் அரசுக்கு அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, மே. 15

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை கொயம்பேட்டில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தின் பயன்பாடு விரைவில் முடிவுக்கு வரவிருக்கும் நிலையில், பேருந்து நிலையம் அமைந்துள்ள 36 ஏக்கர் நிலத்தில் வணிக மால் அமைக்கலாம் என்பது உள்ளிட்ட 3 திட்டங்களை சி.எம்.டி.ஏ எனப்படும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உருவாக்கி இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மால் அமைப்பது உள்ளிட்ட இரு திட்டங்கள் வணிக நோக்கம் கொண்டவை என்பதால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அத்திட்டங்களை அரசு ஏற்கக்கூடாது.

சென்னை கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு வந்த பெரும்பாலான பேருந்துகள் அங்கு மாற்றப்பட்டன. சென்னை குத்தம்பாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பிறகு மீதமுள்ள பேருந்துகளும் அங்கு மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்பின் இப்போது கோயம்பேடு பேருந்து நிலையம் அமைந்திருக்கும் 36 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில், 1. நகர்ப்புற பசுமைப் பூங்கா அமைக்கலாம், 2. வணிக வளாகங்கள், அலுவலங்கள், திரையரங்குகள், உணவகங்கள் மற்றும் பசுமை வெளி கொண்ட வளாகம் அமைக்கலாம், 3. பிரமாண்ட வணிக மால் அமைக்கலாம் என்பன உள்ளிட்ட 3 திட்டங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தயாரித்து இருப்பதாகவும், விரைவில் அரசின் ஆய்வுக்காக அத்திட்டங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

முந்தைய திமுக ஆட்சியில் ஆளுங்கட்சிக்கு நெருக்கமாக இருந்த பன்னாட்டு நிறுவனத்திற்கு அந்த இடத்தை தாரை வார்க்கவும், அந்த இடத்தில் மிகப் பிரமாண்டமாக வணிக மால் அமைக்க அந்த நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு எதிராக பாட்டாளி மக்கள் கட்சி குரல் கொடுத்ததுடன், 10 லட்சம் பேரிடம் கையெழுத்து வாங்கும் இயக்கத்தையும், பரப்புரை இயக்கத்தையும் மேற்கொண்டது. அதன் பயனாகத் தான் கோயம்பேடு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள நிலத்தில் மால் மட்டும் தான் அமைக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் இருந்து மாறி பசுமைப் பூங்கா அமைப்பது உள்ளிட்ட மேலும் இரு திட்டங்களையும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உருவாக்கியுள்ளது. ஆனாலும், பிரமாண்ட மால் அமைக்கும் யோசனையை இன்னும் வலியுறுத்துவது திமுக அரசின் சிந்தனை தான்.

எந்த வகையில் பார்த்தாலும் கோயம்பேடு பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்தையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 66 ஏக்கர் பரப்பளவில் பசுமைப்பூங்கா அமைப்பது தான் சரியான நடவடிக்கையாக இருக்கும். "சென்னையில் ஒரு தனி மனிதருக்கான பசுமை நிலப் பகுதி (Per capita green cover) 1.03 சதுர மீட்டராகவும் உள்ளது. மேலும் சென்னைப் பெருநகரின் பசுமை வெளியானது, வனப்பகுதி, பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், திறந்த வெளித் திடல்கள் என அனைத்தும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக சென்னையின் பரப்பில் வெறும் 6.7 விழுக்காடாகத் தான் உள்ளது" என்பதை முந்தைய அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றவும், சென்னையின் தனிநபர் பசுமை நிலப்பகுதியை அதிகரிக்கவும் கோயம்பேட்டில் பசுமைப் பூங்கா அமைப்பது மிகச்சிறந்த வாய்ப்பு ஆகும்.

நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், இருதய நோய்கள், அதீத உடல்பருமன் உள்ளிட்ட பாதிப்புகள் அதிகமாகி வருகின்றன. இவற்றை கட்டுப்படுத்துவதற்கும் மக்களின் உடலுழைப்பு வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் பூங்காக்கள் தேவை. அதனால், சென்னையின் பசுமைப்போர்வை பரப்பு குறைந்து விட்ட நிலையில் அதை ஈடுகட்ட புதிய பூங்காக்களை உருவாக்குவது மிகவும் அவசியமாகும். அது மட்டுமின்றி, சென்னையில் பெரிய பூங்காக்கள் இல்லை. டெல்லியில் மெஹ்ராலி பூங்கா 200 ஏக்கரிலும் லோதி பூங்கா 90 ஏக்கரிலும் அமைந்துள்ளன. இவை தவிர புதுடெல்லியின் பதர்பூர் பகுதியில் ஆசியாவின் மிகப்பெரிய பூங்கா 880 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. பெங்களூரில் லால் பாக் பூங்கா 240 ஏக்கரிலும், கப்பன் பூங்கா 100 ஏக்கரிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்னையில் அத்தகைய பூங்காக்கள் இல்லை.

கிண்டியில் சென்னை ரேஸ் கிளப்பிடமிருந்து மீட்கப்பட்ட இடத்தில் 118 ஏக்கரில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டு வரும் போதிலும், சென்னையின் தேவைக்கு அது போதுமானதல்ல. அது மட்டுமின்றி, கோயம்பேடு, அண்ணா நகர் போன்ற பகுதிகளையிட்டிய புறநகர் பகுதி வேகமாக விரிவடைந்து வரும் நிலையில், கோயம்பேட்டில் பசுமைப்பூங்காவை அரசு அமைப்பது தான் மிகச்சரியான முடிவாக இருக்கும்.

கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள பகுதி பசுமைப் பூங்காவாக மாற்றப்பட்டால், அண்ணா நகர், கோயம்பேடு, முகப்பேர், அம்பத்தூர், பெரம்பூர், வடபழனி, கோடம்பாக்கம், அரும்பாக்கம், சூளைமேடு, அசோக்நகர், வளசரவாக்கம், விருகம்பாக்கம், சாலிகிராமம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவர். அவர்களுக்கு நடைபயிற்சியும், உடற்பயிற்சியும் செய்ய பசுமைச் சூழலுடன் கூடிய வளாகம் கிடைக்கும். இதற்கெல்லாம் மேலாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களின் குழந்தைகளுடன் வந்து ஆரோக்கியமான சூழலில் பொழுதுபோக்குவதற்கும் கோயம்பேடு பசுமைப் பூங்கா பெருமளவில் பயன்படும்.

எனவே, சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 3 திட்டங்களில் மால் அமைக்கும் திட்டம், வணிக வளாகங்கள் மற்றும் திரையரங்குகள் அமைக்கும் திட்டம் ஆகியவற்றை புதிய அரசு கைவிட வேண்டும். மாறாக, சென்னை புறநகர் பேருந்து நிலையம் அமைந்துள்ள 36 ஏக்கர், அதைச் சுற்றியுள்ள ஆம்னி பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட 30 ஏக்கர் என மொத்தம் 66 ஏக்கர் நிலப் பரப்பில் மிகப்பெரிய அளவில் பசுமைப்பூங்காவை அமைக்க தமிழக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.50 லட்சம் மதிப்புள்ள பீடி இலைகள்

## திருச்செந்தூரில் பறிமுதல்




தூத்துக்குடி, மே. 15

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சூர்யா டிம்பர் டிப்போ பின்புறம் உள்ள கடற்கரை பகுதியில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தப்படுவதாக கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அந்த தகவலின்பேரில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ராமசந்திரன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ராமர், ஏட்டுகள் இருதயராஜகுமார், இசக்கிமுத்து, காவலர்கள் பழனி, பாலமுருகன், பேச்சிராஜா ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது சூர்யா டிம்பர் டிப்போவில் இருந்து கடற்கரை செல்லும் வழியில் இன்று அதிகாலையில், தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் நரசன்விலையைச் சேர்ந்த செந்தூர்பாண்டி மகன் மேக்கிங் செல்வம் (வயது 28) என்பவர், ஒரு மினி லோடு வாகனத்தில் இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக கொண்டு வரப்பட்ட சுமார் 35 கிலோ எடை கொண்ட 38 மூடை பீடி இலைகளை கியூ பிரிவு போலீசார் பறிமுதல் செய்தனர்.

மேலும் போலீசார், மினி லோடு வாகனத்தை ஓட்டி வந்த செல்வம் என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுங்கத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் சர்வதேச மதிப்பு சுமார் 50 லட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கோடைகால பயிற்சி முகாம் நிறைவு விழா

திண்டுக்கல், மே 15

திண்டுக்கல் கலை பண்பாட்டு துறை,திண்டுக்கல் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றம் மற்றும் மதுரை மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பில் கடந்த பத்து நான்கு நாட்களாக காந்திஜி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கோடைகால கலை பயிற்சி முகாம் நிறைவு பெற்றது.

நிறைவு விழாவில் மதுரை மண்டல கலை பண்பாட்டு துறை உதவி இயக்குநர் ரேவதி, திண்டுக்கல் மாவட்ட திட்ட அலுவலர் ரமணி மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். பயிற்றுநர்கள் மோகன் (சிலம்பம்), நாகராஜன் ( ஜிம்னாஸ்டிக் மற்றும் மல்லர் கம்பம்), விஜயராஜ் (நாட்டுப்புற நடனம்) மற்றும் காளீஸ்வரி (ஓவியம்) ஆகியோர் மாணவர்களை பயிற்றுவித்தனர். கலந்து கொண்ட மாணவர்களுக்கு கோடைகால கலை பயிற்சி முகாமில் சிலம்பம், ஜிம்னாஸ்டிக் மற்றும் மல்லர் கம்பம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் போன்ற நான்கு கலைகள் எந்த கட்டணமின்றி மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டன. இக்கோடை கால பயிற்சி முகாமை மதுரை மாவட்டம் மையம், விரிவாக்க மையம், ஊரக மையம், சிவகங்கை, திண்டுக்கல், தேனி மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு மண்டல கலை பண்பாட்டு மையமாக விளங்கும் மதுரை கலை பண்பாட்டு துறை ஒவ்வொரு வருட கோடை கால விடுமுறையிலும் குழந்தைகளுக்கு சிறப்பாக நடத்தி வருகின்றனர். இம்முறை 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயிற்சி பெற்று, சான்றிதழ்களையும் பெற்றனர்.



# கோடைகால பயிற்சி முகாம் நிறைவு விழா

திருப்பூர்:மே 15

கருவம்பாளையம்காங்கிரஸ் திருப்பூர் மாநகர மாவட்ட தலைவர் பி.கோபால் சாமி அவர்களின் வழிகாட்டுதலில் 43வது வார்டு தலைவி.எஸ்.பிரேமலதா B.com அவரதுஅறிவுறுத்தல் படி எஸ்.சாதிக்பாட்சா அவர்களின் தலைமையில் காங்கிரஸ் கட்சியில் திமுக நிர்வாகி T.நாச்சிமுத்து 43வார்டு பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக திராவிட முன்னேற்ற கழகத்தில் பயணித்தவர் கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைத்துக் கொண்டார்.அவருக்கு வார்டு நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்வார்டு துணை தலைவர் அபுதாகீர்.மற்றும் தோழர்கள் எஸ்.சேதுபதி மகளிர் அணி நிர்வாகிகளும் வாழ்த்து தெரிவித்தனர்.



### நாகர்கோவில் மாநகராட்சி

# பொதுமக்கள் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை

## மேயர் (பொ) மேரி பிரின்ஸி லதா அதிகாரிகளுக்கு உத்தரவு

நாகர்கோவில், மே.15

நாகர்கோவில் மாநகராட்சி பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் நடைபெறுவது வழக்கம். ஆனால் தமிழக சட்டசபை தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக குறைதீர்க்கும் முகாம் நடத்தப்படவில்லை. இந்த நிலையில் தேர்தல் நடத்த விதிகள் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வகையில் மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று குறைதீர்க்கும் முகாம் நடந்தது. கூட்டத்துக்கு பொறுப்பு மேயர் மேரி பிரின்சிலதா தலைமை தாங்கி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். அந்த வகையில் 10க்கும் மேற்பட்ட மனுக்கள் வந்திருந்தன. குடிநீர் பிரச்சினை, சாலை சீரமைப்பு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்கள் வந்திருந்தன. அந்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு (பொ)மேயர் மேரி பிரின்சிலதா உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளில் தற்போதைய நிலை குறித்தும், அடுத்ததாக என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

### சூரங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில்

# தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனைக்காக காரில் வைத்திருந்த நபர் கைது



சூரங்குடி, மே. 15

சூரங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனைக்காக காரில் வைத்திருந்த நபரை கைது செய்து 36 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், ரொக்க பணம் ரூபாய் 41,800/ மற்றும் கார் பறிமுதல் : சூரங்குடி காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சூரங்குடி காவல் நிலைய ஆய்வாளர் செல்வராஜ் தலைமையிலான போலீசார் நேற்று சூரங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நெடுங்குளம் பகுதியில் உள்ள ஒரு பாலத்தின் அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் கார் அருகில் நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரணை செய்ததில், அவர் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கருத்தவேல் (33) என்பதும், அவர்தடைசெய்யப்பட்டபுகையிலைபொருட்களை விற்பனைக்காக காரில் வைத்திருந்ததும் தெரியவந்தது .

உடனே மேற்படி போலீசார் கருத்தவேல் என்பவரை கைது செய்து அவரிடமிருந்த 36 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள், ரொக்கப் பணம் ரூபாய் 41,800/ மற்றும் கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து சூரங்குடி காவல் நிலைய போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில்

# ஜமாபந்தி ஜூன் 2 முதல் தொடக்கம் ஆட்சியர் விஷு மகாஜன் அறிவிப்பு



துத்துக்குடி, மே. 15

தூத்துக்குடி மாவட்டத்தில் 1435ஆம் ஆண்டிற்கான வருவாய் தீர்வாய கணக்குகள் முடிவு செய்யும் பணி (ஜமாபந்தி) வரும் 02.06.2026 முதல் தொடங்க உள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் விரிவான அட்டவணையை வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு தாலுகாவிலும் காலை 10.00 மணிக்கு அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் ஜமாபந்தி நடைபெறும். திங்கள் மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படும்.

இதற்கான வருவாய் தீர்வாய அலுவலர்களை மாவட்ட ஆட்சியர்நியமித்துள்ளார். இதன்படி, ஏரல் வட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரும், கயத்தார் வட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலரும் ஜூன் 2 முதல் முறையே 11 மற்றும் 12ஆம் தேதி வரை தலைமை தாங்குகின்றனர். திருச்செந்தூர் வட்டத்திற்குத் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (இஸ்ரோ) மற்றும்ஓட்டப்பிடாரம்வட்டத்திற்குத்தனிமாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) ஆகியோர் ஜமாபந்தி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், தூத்துக்குடி வட்டத்திற்குத் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலைகள்) அவர்களும், விளாத்திகுளம் மற்றும் கோவில்பட்டி வட்டங்களுக்குத் தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவைச் சேர்ந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (I மற்றும் II) ஜூன் 2 முதல் ஜூன் 9 மற்றும் 12ஆம் தேதிகள் வரை கணக்குகளைத் தணிக்கை செய்து மனுக்களைப் பெறுகின்றனர். எட்டையாபுரம் வட்டத்திற்குச் சார் ஆட்சியரும், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம்வட்டங்களுக்குமுறையேதூத்துக்குடி மற்றும் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர்களும்தீர்வாய அலுவலர்களாகச்செயல்பட உள்ளனர். பொதுமக்கள் தங்களது கோரிக்கை விண்ணப்ப ங்களை, அந்தந்த கிராமங்களுக்குரிய வருவாய் தீர்வாயம் நடைபெறும் நாளில், வருவாய் தீர்வாய அலுவலர்களிடம் கொடுத்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தெரிவித்துள்ளார்.

### நெல்லையில்

# கஞ்சா விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

நெல்லை, மே. 15

திருநெல்வேலி சந்திப்பு பகுதியை சேர்ந்த அய்யாதுரை மகன் மாரிமுத்து (வயது 29) என்பவர் நெல்லை மாநகர பகுதியில் கஞ்சா போதை பொருள் விற்பனை செய்து எதிர்மறை கண்காணிப்பிற்கு வந்து, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதார பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்து வந்த "மருந்து சரக்கு குற்றவாளி" ஆவார்.

அதைத் தொடர்ந்து திருநெல்வேலி சந்திப்பு காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி மாரிமுத்து நேற்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

## முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கு சான்று பெறும் வழிமுறைகள்

### மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜும் அறிவிப்பு



தஞ்சாவூர் மே 15

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் படை வீரர்களின் குழந்தைகள் இடம ஒதுக்கீட்டில் சான்று' பெறுவதற்கான வழிமுறைகளை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் அறிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள செய்தி குறிப்பில்கூறியிருப்பது:

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களி ன் சிறார்களுக்கு 2026 27 கல்வி ஆண்டில் கல்லூரி பட்டப்படிப்புகள் மேற்படிப்புகள்,பட்டய மேற்படிப்பு கள் மற்றும் தொழில் சார்ந்த (இளநிலை மற்றும் முதுநிலை) உள்ளிட்ட பல்வேறு படிப்புகளில் சேர இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டு ள்ளது

இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் கல்வி நிறுவனங்களில் கல்வி ச சேர் கைக்காக முன்னாள் படை வீரர்களின் குழந்தைகள், சான்று பெற மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில், சான்று வழங்கப் பட்டு வருகிறது.

இந்த சான்று பெற முன்னாள் படை வீரரின் அசல் படை விலகல் சான்று, ஒய்வூதிய ஆணை, சிறார் அவர்களின் மதிப்பெண் சான்று நகல் அல்லது கணினியில் பதிவிறக்கம் செய்த சான்று (பள்ளியில் மேலொப்பம் பெற்று) பெயர், படை விலகல் சான்று இல்லையெனில், பகுதி இறுதி ஆணை, இணையதளத்தில் விண்ணப்ப நகல் ஆகியவற்றுடன் தஞ்சாவூர் மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகவும். மாவட்ட அலுவலகத்து க்கு நேரில் வர இயலாதவர்கள் https://exwel.tngov.in என்ற இணைய தள முகவரியில் இருந்து முன்னாள் படை வீரர்களின் குழந்தைகள் சான்று பெறும் விண்ணப்பம் மற்றும் முன்னாளுமை சரிபார்ப்பு படிவத்தை பதிவிறக்கம் செய்து, அதை பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களை இணைத்து exweltnj@tn.gov.in, என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும் மேலும் விவரங்களுக்குமாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவல க தொலை பேசி எண்(04362 230104) தொடர்பு கொள்ளலாம் என்று கலெக்டர் கூறியுள்ளார்

நாகர்கோவிலில்

## நள்ளிரவில் மண்ணெண்ணெய் கடத்தி சென்ற கார்: சாலை தடுப்பில் மோதி விபத்து



நாகர்கோவில், மே. 15

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் வழியாக கேரளாவை நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவு கார் ஒன்று அதிவேகமாக சென்று கொண்டிருந்தது. அந்த கார் இரவு 12 மணி அளவில் செட்டிகுளம் பகுதியில் இருந்து மாவட்ட கலெக்டர் அலுவலக சாலையில் சென்றது. அப்போது அந்த கார் எதிர்பாராத விதமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் தாறுமாறாக ஓடி, பின்பு சாலை நாடுவே இருந்த சென்டர் மீடியன் மீது பயங்கரமாக மோதி விபத்துக்கு உள்ளானது. விபத்தில் சிக்கிய காரின் முன்பகுதி அப்பளம் போல் நொறங்கியது. மேலும் காரின் உள்ளே கேன்களில் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய்சாலையில்ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. இதனால் அந்த பகுதி முழுவதும் மண்ணெண்ணெய் வாடை வீசியது. உடனடியாக விபத்து குறித்து பொது மக்கள் தீயணைப்பு துறைக்கும், போக்குவரத்து போலீசர்களும் தகவல் தெரிவித்தனர். போலீசார் மீட்பு வாகனத்தின் உதவியுடன் விபத்துக்குள்ளான காரை சாலையில் இருந்து அகற்றி ஓரமாக நிறுத்தினர்.

இந்த விபத்தில் காரை ஓட்டி வந்த டிரைவர் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். அவரை போலீசார் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அதன் பிறகு சாலையில் கொட்டி கிடந்த மண்ணெண்ணெயை அகற்றும் பணி தொடங்கியது. தீயணைப்பு வீரர்கள் தண்ணீர் பீச்சி அடித்து சாலை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக அந்த பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. விபதில் சிக்கிய கார் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். டிரைவர் படுகாயமடைந்த நிலையில் இருப்பதால் அவரைப்பற்றி எந்த தவறும் உடனடியாக கிடைக்கவில்லை. காரின் பதிவு எண்ணை வைத்து அந்த கார் யாருடையது? என்று விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

குறும்பனை கடற்கரை பகுதியில்

## கடலில் மூழ்கிய பள்ளி மாணவி; சடலமாக மீட்பு



நாகர்கோவில், மே.15

கருங்கல் அருகே பாலப் பள்ளம் பகுதி சேர்ந்த முருகன் என்பவரும் தனது மகள் சுருதி (14) 9ம் வகுப்பு மாணவி மற்றும் 9 வயது மகனும், அவரது நண்பரான சுஜி லாரன்ஸ், அவரது மனைவி ராஜேஸ்வரி, மகன் சுஜித் (14 )ஆகியோர் உட்பட 7 பேர் குறும்பனை அருகில் உள்ள பாரியக்கல் கடற்கரை பகுதியில் கடந்த செவ்வாய் கிழமை மாலையில் வந்திருந்தனர். பெரியவர்கள் கடற்கரையில் இருக்க, குழந்தைகள் கடலில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென சுருதி மற்றும் அஜித் ஆகியோரை கடல் அலை இழுத்து சென்றது. இதை பார்த்ததும் கரையில் இருந்த பெற்றோர், உறவினர்கள் கூச்சலிட்டனர். அந்த பகுதியில் உள்ள மீனவர்கள் உடனடியாக கடலுக்குள் இறங்கி அவர்களை மீட்க முயன்றனர். சிறிது நேரத்தில் சுஜித்தை அலை கரையில் கொண்டு வந்து வீசி உள்ளது. அதனால் ச சுருதி கடலில் மாயமானார். இது குறித்து தகவல் அறிந்ததும் குளச்சல் கடலோர காவல் நிலைய போலீசார் மற்றும் குளச்சல் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து அவர்கள் சுருதியை தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் போதிய வெளிச்சம் இல்லாததால் தேடும் பணி நிறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மீண்டும் 2வது நாளாக தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றது. உடல் கிடைக்கவில்லை. நேற்று 3ம் நாளாக மீண்டும் மீண்டும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது அப்போது பாரியக் கரை கடற்கரையில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மிடாலம் கடற்கரை பகுதியில் உள்ள கடலில் சிறுமியின் உடல் மிதந்துள்ளது. இதை பார்த்த அப்பகுதி மீனவர்கள் சிறுமியின் உடலை படகுமூலம் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். போலீசார் மாணவியின் உடலை பிரேத பரிசோதனைக்காக குமாரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

நாகர்கோவிலில்

## நள்ளிரவில் நகை கடையை உடைத்து ரூ 1 கோடி நகைகள் கொள்ளை




நாகர்கோவில், மே.15

நாகர்கோவில் அருகே உள்ள என் ஜி ஓ காலனி பகுதியை சேர்ந்தவர் அன்பையா. இவர் அதே பகுதியில் நகைக்கடை நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் வியாபாரத்தை முடித்துவிட்டு கடையை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்று விட்டார். இந்த நிலையில் நள்ளிரவு சுமார் 1:30 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த 4 மர்ம நபர்கள் நகைக்கடையை கம்பியால் அடித்து உடைத்து உள்ளனர். அந்த சத்தம் கேட்டு அந்த பகுதியை சேர்ந்த ஒருவர் வந்து பார்த்து அதிர்ச்சி அடைந்தார். அவர் அது பற்றி உடனடியாக போலீஸ் கட்டுப்பாடு அறைக்கும், சுசீந்திரம் போலீஸ் நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தார்.

இதை அடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் கொள்ளையர்கள் நகைக்கடையின் உள்ளே சென்று நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை கொள்ளையடித்தனர். அவற்றை அள்ளிக்கொண்டு வந்த மோட்டார் சைக்கிளில் தப்பி சென்று விட்டனர். தன்னுடைய கடையை மர்ம நபர்கள் உடைத்த சம்பவம் குறித்து அன்பையாவும் சம்பவ இடம் வந்தார். சுசீந்திரம் போலீசார் நகைக் கடையில் சென்று பார்வையிட்டபோது கடையில் இருந்த 70 பவுன் தங்க நகைகள் மற்றும் 10 கிலோ வெள்ளி கொள்ளை போய் இருந்ததும், அவற்றின் மதிப்பு ஒரு கோடி ரூபாய் இருக்கும் என கூறப்படுகிறது. தப்பி சென்ற கொள்ளையர்களை பிடிக்கமாவட்டம்முழுவதும்போலீசார்உடனடியாக உஷார் படுத்தப்பட்டனர்.

பின்னர் கடையில் பதிந்திருந்த கைரேகை மற்றும் தடையங்களை போலீசார் சேகரித்தனர். சம்பவ இடத்திற்கு மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. கொள்ளையில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காணுவதற்காக நகைக்கடை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இருந்து சிசிடிவி கேமராக்களில் பதிவாகி இருந்த வீடியோக்களை கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது 4 வாலிபர்கள் 2 மோட்டார் சைக்கிளில் வந்து கடையை உடைக்கும் காட்சிகள் பதிவாகியிருந்தது. அவர்களில் ஒருவர் மட்டுமே முகக்கவசம் அணிந்திருந்தார்.

மற்ற 3 பேரும் முககவசம் அணியாமல் இருந்ததால் அவர்களின் முகம் நகை கடையில் இருந்த ஒரு கேமராவில் தெளிவாக பதிவாகியுள்ளது. அதன் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். நாகர்கோவில் நகரில் மிகமுக்கியமான பகுதியில் மெயின் சாலை அமைந்துள்ள நகைக்கடையில் நடந்த இந்த கொள்ளை சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

தக்கலை அருகே

## திமுக நிர்வாகியிடம் ரூ 1.75 லட்சம் மோசடி; தவெக பிரமுகர் கைது



தக்கலை, மே .15

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள கீழக் கல்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் ரவிக்குமார் (51) குமரி மேற்கு மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளராக உள்ளார். வெளிநாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்து வந்த ரவிக்குமார் கடந்த 2021 ஆம் ஆண்டு சொந்த ஊருக்கு திரும்பி வந்து விட்டார். அதன் பிறகு இங்கு பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். மேலும் திமுக நிர்வாகியாகவும் பொறுப்பு வகித்தார்.

இந்தநிலையில் டெல்லி மல்டி பர்ப்பஸ் சொசைட்டி பைனான்ஸ்ஐதக்கலையில்தொடங்கதிட்டமிட்டார். அப்போது அவருக்கு குலசேகரம் அருகே உள்ள வெண்டலிகோடு பகுதியை சேர்ந்த ஜெகதீஷ் (45) என்பவர் அறிமுகமாகி இருக்கிறார். ரவிக்குமார் தன்னை வக்கீல் என்று அறிமுகம் செய்து கொண்டு, தனக்கு டெல்லியில் சிலரை தெரிந்த நபர்கள் உண்டு எனவும், அவர் தொடங்க திட்டமிட்டு இருக்கும் பைனான்சுக்கு அனுமதி பெற்றுத்தர உதவுவதாகவும் கூறியிருந்தார். மேலும் இரண்டு லட்சம் பணமும் கேட்டிருக்கிறார். இதை எடுத்து ஜெகதீசுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ரவிக்குமார் 1.75 லட்சம் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர் கூறியபடி அனுமதி பெற்று தரவில்லை. வாங்கிய பணத்தையும் திருப்பித் தரவில்லை.

ஆகவே தன்னிடம் பணம் வாங்கி மோசடி செய்து விட்டதாக தக்கலை போலீஸ் நிலையத்தில் ரவிக்குமார் கடந்த பிப்ரவரி மாதம் புகார் செய்தார். அதன் பெயரில் தக்கலை போலீசார் வழக்கப்பதிந்து விசாரணை நடத்தினர். தலைமறைவாக இருந்த ஜெகதீஷை தொடர்ந்து தேடி வந்தனர். இந்த நிலையில் ஜெகதீஷ் தக்கலை போலீசார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். அவரிடம் மோசடி புகார் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. ஜெகதீஸ் தற்போது தெவெக பிரமுகராக இருக்கிறார். பண மோசடி வழக்கில் த வெக பிரமுகர் கைது செய்யப்பட்டிருக்கும் சம்பவம் தக்கலையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீட் தேர்வில் தொடர்ந்து குளறுபடிகள்;

## தேசிய தேர்வு முகமை அமைப்பை சீரமைக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு



சென்னை, மே. 15

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். உள்ளிட்ட மருத்துவ படிப்புகளில் சேருவதற்கு 'நீட்' நுழைவுத்தேர்வை, தேசிய தேர்வு முகமை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி, 202627ம் கல்வியாண்டில் மருத்துவ படிப்புகளில் சேர்வதற்கான நீட் நுழைவுத்தேர்வு கடந்த 3ந்தேதி நாடு முழுவதும் 552 நகரங்களிலும், துபாய் உள்ளிட்ட வெளி நாடுகளில் 14 இடங்களிலும் எனமொத்தம் 5,432 தேர்வு மையங்களில் நடைபெற்றது. இந்த நீட் தேர்வைநாடுமுழுவதும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் எழுதினர்.

இதனிடையே நீட் தேர்வு வினாத்தாள் பல்வேறு இடங்களில் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே கசிந்ததாக புகார் எழுந்தது. இதனை தொடர்ந்து நீட் நுழைவுத்தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் நீட் தேர்வைநடத்தும் தேசிய தேர்வு முகமை அமைப்பை மாற்ற வேண்டும் அல்லது, மறு சீரமைப்பு செய்ய வேண்டும் எனக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை 'அகில இந்திய மருத்துவ சங்கங்களின் கூட்டமைப்பு' (FAIMA) சார்பில், வழக்கறிஞர் தன்வி துபே தாக்கல் செய்துள்ளார். வினாத்தாள் கசிவுகள் உள்ளிட்ட தொடர் குளறுபடிகள் காரணமாக 22.7 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீது நேரடித் தாக்குதல் நடத்தப்படுவதாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

மேலும், தேசிய தேர்வு முகமை அமைப்புக்கு பதிலாக ஒரு புதிய அமைப்பு முறையாக அமைக்கப்படும் வரை, உயர் அதிகாரம் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும், இனிமேல் வினாத்தாள் கசியாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, அக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி, ஒரு சைபர் பாதுகாப்பு நிபுணர் மற்றும் ஒரு தடயவியல் விஞ்ஞானி ஆகியோர் இடம்பெற வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.





தஞ்சாவூர்

## இராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் கலெக்டர் ஆய்வு

தஞ்சாவூர் மே 15

தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவுக்கு கூடுதல் இடவசதி ஏற்படுத்துவது குறித்து மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் டாக்டர்களுடன் ஆய்வு நடத்தினார்

அப்போது தேசிய நல வாழ்வு குழும குழந்தைகள் நல டாக்டர் சீனிவாசன் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். மேலும் மகப்பேறு பிரிவு மற்றும் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றுக்கு போதுமான அளவு இட வசதி உள்ளதா ?என்பது குறித்தும், கூடுதல் இடவசதி ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் டாக்டர் கள் மற்றும் பொது பணித்துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

மேலும் நோயாளிகளுடன் வருபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான தங்கும் வசதி கழிவறை வசதி மின் மின் வசதி குடிநீர் வசதி ஸ்கேன் எடுக்கும் வசதி உள்ளிட்டவைகள் குறித்தும் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு மேற்கொண்டார் மேலும் டாக்டர்கள் மற்றும் செவிலியர்களுக்கான அடிப்படை வசதிகளை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

இந்த ஆய்வின் போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் பாலசுப்பிரமணியன் ராசா மிராசுதார் அரசு மருத்துவமனையின் நிலையை டாக்டர் அமுதவல்லி அமுதவடிவு குழந்தைகள் நல டாக்டர் செல்வகுமார் மகளிர் நலன் மற்றும் மகப்பேறு டாக்டர் அமுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட கொத்தூர் பகுதியில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.9 கோடியே 20 இலட்சம் மதிப்பில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், பர்கூர் பேரூராட்சி செயல் அலுவலர் . டி.குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் .உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.